1975 மார்ச் 8]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: நிலத்தை இப்போதே ஆர்ஜிதம் செய்கிறோம், வீடுகட்டித்தருவதுதான் 5 ஆண்டுகளுக்குப் பிறகு. அதற்குப் பணம் இரண்டாயிரம் தேவை. அது ஐந்தாண்டுகளில் சேமிக்கப்படுகிறது, பேங்கிலிருந்து 8,000 கடனாக வாங்கப்படுகிறது, அதனால்தான் காலதாமதம் ஆகிறது. இன்னும் கேட்டால் ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு, ஆசிரியர்களுக்குத் தான் இது சிறந்த திட்டமாக அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Adult schools in slum areas

* 246 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether adult schools are being run in areas where slums are housed in Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) சென்னை மாநகரிலுள்ள தாண்டவராயப்பிள்ளை சத்திரம், கல்லறைச்சாலை, டாக்டர் சந்தோஷம் நகர், அப்பாசாமி முதலித் தெரு (சேத்துப்பட்டு), சீனிவாசபுரம், கோட்டூர்புரம், பிருந்தாவனம் முதலிய இடங்களிலுள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் முதியோர்களுக்கான பள்ளிகளை நாள்தோறும் புதுக் குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவை நடத்தி வருகிறது.

Eradication of snails in sheep

* 247 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(*a*) whether there is any proposal to start a programme for the eradication of snails in the sheep at Hosur and Denkanikottah taluks; and

(*b*) if so, when it will be implemented?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) இல்லை.

[1975 மார்ச் 8

(முற்பகல் 10-00)

THIRU B. VENKATASWAMY : Due to water stagnation and drinking of bad water the sheep are getting snails and so many sheep are dying. May I know from the Hon. Minister whether eradication of snails in the sheep will be taken up in Dharmapuri district, especially because lot of sheep are dying there?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, மழைக் காலத்திலே ஹோசூர் பகுதியிலே நத்தையின் மூலமாக ஆடு களுக்கு வியாதி பரவுகிறது. இப்பொழுது மழை இல்லாத நிலையில் இதுபோன்ற நிலை அங்கே இருப்பதாகத் தகவல் இல்லை. அப்படிப்பட்ட தகவல் இருக்குமானால் அமல் படுத்தலாம்.

New hotel at Mudumalai

* 248 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(*a*) whether it is a fact that the Government propose to lease out lands in Mudumalai Sanctuary to private parties to run 'Tree-top' hotels; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இப்பொழுது முது மலையிலே யானைகள், இன்னும் மற்ற மிருகங்களைப் பார்ப்பதற்காக அடிக்கடி மக்கள் செல்கிறார்கள். இப்பொழுது உதகையில்தான் இம்மாதிரியான வசதி இருக்கிறதே தவிர, முதுமலைக்குப் போகின்றவர்களுக்கு அந்த ஏரியாவிலே அதிகாரிகள் தங்கு வதற்கான இடம் வைத்திருக்கிறார்களே தவிர, மற்றவர்களும் தங்குவதற்கான இட வசதிக்கான ஏற்பாட்டைச் செய்ய அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, தனியார் அந்த இடத்திலே விடுதி கட்ட வேண்டுமென்று விண்ணப் பித்தார்கள். மூன்று மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள், —கர்நாடகம், கோளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த 3 செயலாளர்களும்—இந்தச் சரணாலயங்களை விஸ்தரிப்பதை யொட்டிப் பேசிய அந்தக் கூட்டத்தில் தனியார்களுக்கு இம்மாதிரி